**முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்**

**O.S.No.07/2021**

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | சரஸ்வதி |
| தகப்பனார் / கணவர் | .. | தீனதயாளன் |
| வயது | .. | 68 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| தாலுக்கா | .. | சென்னை |

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ஆம் நாள் புதன்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

கோவிந்தப்ப நாயக்கர் என் தகப்பனார் என்றால் சரிதான். அவர் எப்போது இறந்தார் என்றால் 1984 ஆல் இறந்தார். என் தாயார் ரங்கநாயகி அம்மாள் 2009 ஆம் ஆண்டு காலமானார். மேற்படி தம்பதியருக்கு இரண்டு நானும், பிரதிவாதி ஆகிய இருவர் மட்டுமே வாரிசு என்றால் சரிதான். என் தகப்பானார் இருக்கும் போதே எனக்கு திருமணம் நடைபெற்றது, 1977 ஆம் ஆண்டு செப்டம்படரில் எனக்கு திருமணம் நடைபெற்றது. திருமணம் நடைபெற்றதில் இருந்தது நான் சென்னையில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். என் தகப்பனார் ஊரில் செல்வாக்கு மற்றும் வசதியானர் என்றால் சரிதான். அதனால் என் திருமணத்தை மிக சிறப்பாக செய்து வைத்தார் என்றால் சரிதான். நகைகள் மற்றும் சீர் வரிசைகள் போட்டு செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் என் தகப்பானார் கிரையம் வாங்கிய சொத்துக்கள் என்றால் சரிதான். பிரதிவாதி எனது அண்ணன் ஆவார். திருமணம் முதலில் பிரதிவாதிக்கு தான் செய்து வைத்தார்கள். எனக்கு திருமணம் நடைபெற்ற பிறகு என் அம்மா எனக்கு அனைத்து உதவிகளும் செய்துவந்தார், என் அப்பா செய்யவில்லை. என் தகப்பனார் உயிருடன் இருக்கும் காலங்களில் இருந்தே என் அண்ணன் தான் அனுபவித்து வந்தார் என்றால் இல்லை, என் அம்மா மற்றும் சின்னம்மா ராதா பாய் அம்மாள் தான் அனுபவித்து வந்தார்கள், பிரதிவாதிசென்னையில்

பணிபுரிந்து வந்தார். அதேபோல ராதாபாய் அம்மாளுக்கு தாவா சொத்துக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான், என் அம்மாவின் தங்கை. என் தகப்பனார் உயிருடன் இருக்கும்போது வழக்கு சொத்துக்களை என் அண்ணனிடம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனக்கு நல்ல முறையில் திருமணம் நடத்தி வைத்த காரணத்தால், அதற்கு பதிலாக வழக்கு சொத்து கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கான பட்டாக்கள் என் அண்ணன் பெயரில் உள்ளது என்று சொன்னால் பெயர் மாறவில்லை. வழக்கு சொத்துக்கள் என் தகப்பானர் பெயரில் உள்ளதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனக்கும் என் அண்ணனுக்கும் எப்போதிலிருந்து விரோதம் என்றால் 30 வருடங்களாக விரோதம், தங்கை என்ற முறையில் எந்த உதவியையும் செய்யவில்லை. வழக்கை சொத்தை நான் எப்போதும் அனுபவித்தது இல்லை என்றால் சரிதான். 1 ஆம் அயிட்ட சொத்தில் 50 செண்டை பிரதிவாதியின் மனைவி விநோதினிக்கு பிரதிவாதி எழுதிவைத்தார் என்றால் அதுபற்றி தெரியாது. அதற்கு பிறகு என் அண்ணன் மனைவியின் பட்டா மாற்றம் செய்து அவர் மேற்படி 50 செண்டை அனுபவித்து வருகிறார் என்றால் தெரியாது. வழக்கு சொத்துக்கள் மற்றும் மேற்படி 50 செண்ட் நிலத்தை பிரதிவாதியும் அவரது மனைவியும் சேர்ந்து அவர்களது மகள் மகாலட்சுமி எழுதிவைத்தார்கள் என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி எதிர்வழக்குரையில் வழக்கு சொத்துக்கள் மற்றும் 50 செண்ட் நிலத்தை பிரதிவாதியும் அவரது மனைவியும் சேர்ந்து அவர்களது மகள் மகாலட்சுமி கிரையம் எழுதி கொடுத்த விவரத்தை சொல்லியுள்ளார்கள் என்றால் தெரியாது. அதனால் என் அண்ணனின் மனைவி விநோனி மற்றும் அவரது மகாலட்சுமி இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் அவசியத் தரப்பினர் சேர்க்காததால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டது என்றால் தெரியாது. நான் ஏற்கனவே வீட்டில் இருந்து வெளியேற்றபட்டு விட்டேன் என்பதால் சொத்து மற்றும் வீட்டில் பங்கு இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு பங்கு இருந்து இருந்தால் என் தகப்பனார் இறந்த உடனே நான் பங்கு கேட்டு இருப்பேன் என்றும், ஆனால் என் தந்தை என் அண்ணனுக்கு சொத்தை ஒப்படைத்ததால் நான் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் பிறரின் தூண்டுதலின் பேரில் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எங்கள் ஊரில் வழக்கு சொத்தை கிரையத்திற்கு என்

அண்ணனிடம் கேட்டதாவும், அவர் தர மறுத்தால் கிரையம் கேட்டவர்களின் தூண்டுதலின் பேரில் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு பாகம் இல்லை என்றும், பிரித்து கொடுக்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல. தற்போது வழக்கு சொத்தை பிரதிவாதியின் மகள் மகாலட்சுமிதான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல, பிரதிவாதி தான் அனுபவிக்கிறார். அதனால் இவ்வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**